Dr R PALANIYANDI I A S
DISTRICT COLLECTOR.

THOOTHUKUDI DISTRICT
THOOTHUKUDI.

**D.O.Lr.No. N/783/08** **Dated:11..02.09**

Dear Sir,

Sub: TN IAMWARM Project - Implementation - Awareness creation utilization of Grama Sabha meetings - Reg.

Ref: Your letter No.MDPU.4/F.30/2008, dated: 05.01.2009.

-----------------

I solicit your esteemed attention to the letter cited above, wherein it was suggested to utilize the Grama Sabha meeting held on 26.01.2009 for creating awareness regarding the TN IAMWARM project among the stake holders.

2) Accordingly, in Thoothukudi District, TN IAMWARM Project awareness programmes were conducted along with the Grama Sabha meetings in all the selected Panchayats of Vaipar, Vembar, Karumeniar, Upppathar and Korampallam aru sub basins.

3) I have participated in the TN IAMWARM campaign along with the Revenue Department and Rural Development Department officers at Tharuvaikulam Panchayat and elicited the role of participant farmers and convergence of allied Departments and their integrated initiatives in the preparation and implementation of TN IAMWARM Project.

Off: 0461-2340600 Res 2320050 2326747 Fax 0461 2324220 Mob 94433-42544
E Mail: Collector@thoothukudi.tn.nic.in Visit us at http://thoothukudi.tn.nic.in

4) All the line department officials involved in the preparation and implementation of TN IAMWARM Project participated in the meeting and explained to the farmers about the project proposals envisaged by their respective Departments.

5) A few photographs taken on the occasion and copies of the pamphlets distributed to the participant farmers of the project area are appended for kind perusal.

Encl: Photographs and Pamphlets

Yours faithfully,

13.02.09

(R.PA LANIYANDI)

To

Thiru Vibhu Nayar, I.A.S.,
Project Director,
IAMWARM Project, MDPU,
Ist Floor,Dam Safety Directorate,
Chepauk,
Chennai -600 005


பொதுப்பணித்துறை / நீர்வள ஆதார அமைப்பு
நீர்வள நிலவள திட்டம் (IAMWARM)
சாலிகுளமாறு உப வடிநிலம்
26-1-2009
இடம் : தருவைகுளம்
தருவைக்குளம் ஊராட்சி
கிராம சபைக் கூட்டம்


நீர்வள நிலவள திட்டம் (IAMWARM)


நீர்வள நிலவள திட்டம் (IAMWARM)


(IAMWARM)




நீர்வள நிலவள திட்டம் (IAMWARM)
கிராம சபைக் கூட்டம்





நீர்வள நிலவள திட்டம் (IAMWARM)
கிராம சபைக் கூட்டம்





# நீர்வள ஆதாரத் துறை

## விவசாயப் பெருமக்களுக்கு ஓர் அறிவிப்பு

1. தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம், 2000 (தமிழ்நாடு சட்டம் 7/2001) தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
2. முதற்கட்டமாக இச்சட்டம், நீர்வள ஆதார தொகுப்புத் திட்ட (WRCP) பாசனப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது.
3. இச்சட்டத்தினை 07.05.2007 முதல் மீதமுள்ள அனைத்து பாசனப் பகுதிகளிலும் செயல்படுத்த தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.
4. இச்சட்டத்தின்படி, தற்சமயம் நீர்வள நிலவளத்திட்டம் (IAMWARM Project) செயல்படுத்தப்படும் 63 உப வடிநில பாசனப்பகுதிகளில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைக்கப்பட உள்ளன.
5. முதற்கட்டமாக, நீர்வள நிலவளத் திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் வருட உபவடிநிலப் பகுதிகளிலும், அடுத்த கட்டமாக மூன்றாவது வருட உபவடிநிலப் பகுதிகளிலும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைக்கப்படும்.
6. மேற்கண்ட சட்டத்தின்படி, வருவாய் துறையின் நில உடமை உரிமை ஆவணங்களில் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள் நிலத்தை உடமையாகக் கொண்டுள்ள நில உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் மட்டுமே நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகமுடியும். இவர்களில் 18வயது நிரம்பியவர்கள் மட்டும் ஓட்டுரிமை பெற்றவர்களாவர்.
7. நீரினைப் பயன்படுத்துவோர் சங்க செயல்பாட்டுப் பகுதி மாவட்ட ஆட்சித்தலைவரால் வரையறுக்கப்பட்டு, ஆட்சி மண்டலத்தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
8. ஒவ்வொரு நீரினைப்பயன்படுத்துவோர் சங்கத்திற்கும் ஒரு தலைவர் மற்றும் நான்கிற்கும் குறையாத ஆனால் பத்துக்கும் மேற்படாத ஆட்சி மண்டலத்தொகுதி உறுப்பினர்கள் மறைமுக வாக்கெடுப்பு மூலம் தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்டு மேலாண்மைக்குழு அமைக்கப்படும்.
9. பின்னர் பகிர்மான பாசன அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பொறுப்புகள், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் வசம் ஒப்படைக்கப்படும்.
10. தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நில உடமையாளர்கள் பட்டியல் மற்றும் 18 வயது நிரம்பிய வாக்காளர் பட்டியல்கள் மாவட்ட ஆட்சித்தலைவரால் நீர்வள ஆதாரத்துறையின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளன.
11. நில உடமையாளர்கள் பட்டியல், வாக்காளர்கள் பட்டியல் மற்றும் சங்கத்தின் வரையறுக்கப்பட்ட வரைபடம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் அறிவிப்புப் பலகைகளில் நில உடமையாளர்களின் தகவலுக்காக வைக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டு வருகின்றன.
12. நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் மேலாண்மைக் குழுக்களை தேர்தல் நடத்தி அமைப்பதற்கு, நில உடமையாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.
13. மேற்கொண்டு இதுபற்றிய தகவல் அறிய, நீர்வள ஆதாரத்துறையின் சம்பந்தப்பட்ட உதவிப்பொறியாளர் / இளநிலைப் பொறியாளரை சந்தித்து விவரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**நீர்வள ஆதாரத்துறை**
மதுரை மண்டலம்

நேஷனல் ஆப்செட் ✆ 331013

# நீர்வள நிலவளத் திட்டம்

## சாலிகுளமாறு உப வடிநிலம்

## தூத்துக்குடி மாவட்டம்

### நீர்வள நிலவளத் திட்டம்

**(TN-IAMWARM Project )**

தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 63 உபவடி நிலங்களில் பாசன மற்றும் வேளாண் மேம்பாட்டிற்காக உலக வங்கி நிதி உதவியுடன் பல துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தும் முன்னோடி திட்டம்

- நீர் பாசனதாரர் சங்கம் அமைத்தலும் பங்கேற்றலும்
- கண்மாய்கள், நீர்வரத்து கால்வாய்கள் மற்றும் மதகுகள் சீரமைத்தல்



- பண்ணை வருவாயினை உயர்த்துதல்
- திருந்திய நெல் சாகுபடி (SRI)
- மாற்றுப் பயிர் சாகுபடி புகுத்துதல்
- பழ மற்றும் காய்கறி பயிரிடுதல்
- துல்லிய வேளாண்மை (Precision Farming) மற்றும் பண்ணை கருவிகள் பயன்பாடு
- வேளாண் வணிகத்திற்கான உள் கட்டமைப்பு மற்றும் வணிக உத்திகள்
- கால்நடை பராமரிப்பு மேம்பாடு, பால் உற்பத்தி பெருக்கம்
- மீன் உற்பத்தி பெருக்கம், மீன்வள மேம்பாடு

தகவல் தொழில் நுட்பம் மூலமாக நீர் பாசன மற்றும் வேளாண் சார்ந்த பிரிவுகளில் துரிதமான வளர்ச்சி

### நீர்வள ஆதார அமைப்பு

- நீர் பாசனதாரர் சங்கம் அமைத்தலும் பங்கேற்றலும்
- அணைக்கட்டுகள், கண்மாய்கள், நீர் வரத்து கால்வாய்கள் மற்றும் மதகுகள் சீரமைத்தல்

மேலும் விவரங்களுக்கு :
கோரம்பள்ளம் ஆறு வடி நில கோட்ட செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை-தூத்துக்குடி

☎ 0461-2326492



### வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

- வேளாண் விளைபொருள் குழு அமைத்து வேளாண் வருமானத்தை உயர்த்துதல்
- அறுவடைக்கு பின்னர் தேவைப்படும் வேளாண் உள் கட்டமைப்புகள்
- புதிய வேளாண்மை சார்ந்த தொழில்கள் மற்றும் மதிப்புக்கூட்டல்களுக்கான இணைப்புகளை ஊக்குவித்தல்



மேலும் விவரங்களுக்கு :
தூத்துக்குடி மாவட்ட விற்பனைகுழு செயலர்கள் / துணை வேளாண்மை இயக்குனர் (விற்பனை) - தூத்துக்குடி

☎ 0461-2347544

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்



- திருந்திய நெல் சாகுபடி
- பாய் நாற்றங்கால் சதுர நடவு முறை, கருவி மூலம் களையெடுப்பு மற்றும் இலை வண்ண அட்டை பயன்பாடு
- உயர் சாகுபடி தொழில் நுட்பங்கள் புகுத்துதல்
- மணிலா, எள், மக்காச்சோளம்
- துல்லிய வேளாண்மை கடைப்பிடித்தல்
- கரும்பு

மேலும் விவரங்களுக்கு :
முதல்வர் கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வல்லநாடு
☎ 04630-261226

## தோட்டக்கலை துறை



- வருங்காலங்களில் வருவாய் பெருக்கிட தோட்டக் கலை பயிர் சாகுபடி முறைகளை பரப்புதல்
- காய்கறி உற்பத்தியில் துல்லிய வேளாண்மை பயன்பாடு
- அதிக மலர் சாகுபடியின் மூலம் வருவாய் பெருக்குதல்

மேலும் விவரங்களுக்கு:
தூத்துக்குடி மாவட்ட
தோட்டக்கலை துணை இயக்குனர்
☎ 0461-2340681

## வேளாண்மைப் பொறியியல் துறை

- பாசன விவசாயத்தினை மேம்படுத்த சொட்டுநீர், மற்றும் தெளிப்பு நீர் பாசன முறையை மேம்படுத்துதல்
- விவசாயப் பதிகளை இயந்திரமயமாக்க, வேளாண் கருவிகள் பரிந்துரைத்தல்
- பண்ணைக் குட்டைகள் அமைத்து, கூடுதல் வருமானம் பெற மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல்

மேலும் விவரங்களுக்கு :
செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல்துறை - தூத்துக்குடி
☎ 0461-2340687



## மீன்வளத்துறை

- பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு செய்தல்
- தரமான மீன் விதை உற்பத்தி மற்றும் பாசன குளங்களில் மீன் வளர்ப்பு
- வண்ண மீன் வளர்ப்பு
- சுகாதாரமான மீன் விற்பனை மூலம் அதிக வருவாய்

மேலும் விவரங்களுக்கு:
உ. தனி இயக்குனர், மீன் வளத்துறை & நீர் உயிரின வளர்ப்பு - தூத்துக்குடி
☎ 0461-2324288



## வேளாண்மைத் துறை



- அதிக வருவாய் பெற மாற்றுப் பயிர் அறிமுகம்
- நவீன சாகுபடி தொழில் நுட்பங்களை பின்பற்றி மகசூல் திறனை பெருக்குதல்

மேலும் விவரங்களுக்கு :
வேளாண்மை இணை இயக்குனர் - தூத்துக்குடி
☎ 0461-2340678

## கால்நடை பராமரிப்புத்துறை



- செயற்கை முறையில் கருவூட்டல்
- தீவன உற்பத்தி பெருக்குதல்
  அதிக பால் உற்பத்தி மூலம் பண்ணை வருமானம் கூட்டுதல்

மேலும் விவரங்களுக்கு :
இணை இயக்குனர், மண்டல கால்நடை பராமரிப்புத் துறை -தூத்துக்குடி
☎ 0461-2300517

தேஷால் ஆப்செட் © 331013

# நீர்வள ஆதாரத் துறை

## பாசன மேலாண்மைப் பணிகளில் விவசாயிகளின் பங்கேற்பு

## விவசாயிகள் விழிப்புணர்வு வெளியீடு

"வான் தந்த மழை காப்போம்
வாழ்வுக்கு வளம் சேர்ப்போம்"

## பாசன மேலாண்மைப் பணிகளில் - விவசாயிகளின் பங்கேற்பின் அவசியம்

1. "வேளாண்மை சிறக்க மிகவும் இன்றியமையாதது பயிர்களுக்குத் தேவையான நீராதாரம். நீராதாரம் சிறப்பாக இல்லை யெனில், வேளாண் உற்பத்தித் திறனை பெருக்க இயலாது. விவசாயத்திற்கு தேவையான நீர், தேவையான நேரத்தில், தேவையான அளவில், நம்பத்தகுந்த வகையில் கிடைத்தாலன்றி, வேளாண் உற்பத்தித்திறன், மொத்த உற்பத்தி ஆகியவை சிறக்க இயலாது.

தமிழக அரசு, பாசன மேலாண்மைப் பணிகளில் விவசாயிகள் பங்கேற்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் பல செயல் திட்டங்கள் மூலம், பாசனதாரர்களை ஊக்குவித்து, பங்கேற்க தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

2. பாசன மேலாண்மைப் பணிகள் என்றால் என்ன?

மழையின் மூலமாகக் கிடைக்கப் பெறும் தண்ணீர் நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள் கட்டப்பட்டு, கால்வாய்கள் மூலமாக விளை நிலங்களுக்கு எடுத்துச் சென்று பயிர்களுக்கு பாசனம் அளிக்கப்படுகின்றது. மேற்கண்ட கட்டுமானங்களை இயக்கி, சரிவிகிதாச்சார தண்ணீர் பங்கீட்டுப் பணிகளைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பணிகளைத்தான் பாசன மேலாண்மைப் பணிகள் என்கின்றோம்.

3. பங்கேற்பு பாசன மேலாண்மை

பாசன மேலாண்மைப் பணிகளில் நீர்வள ஆதாரத்துறையின் அலுவலர்களோடு, விவசாயிகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, பயிர்பான நீர்ப்பாசன அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதே பங்கேற்பு பாசன மேலாண்மை (Partaipatory Irrigation Management) ஆகும். விவசாயிகளுக்கு சட்டரீதியான பொறுப்புகளும், அதிகாரங்களும் வழங்கும் பொருட்டு, தமிழக அரசு, 2000 - ஆம் ஆண்டு, தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 7/ 2001) இயற்றி செயல்படுத்தி வருகிறது.

## 4. தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்ட விவரங்கள்

### (i) நோக்கம்

நீர்ப்பாசன அமைப்பு முறைகளின் மேலாண்மையில், விவசாயிகளைப் பங்கேற்கச் செய்வதே இச்சட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

### (ii) சட்டத்தின் முக்கிய பயன்கள்

- இயற்கை அளித்த சொத்தான நீர்வளத்தை, முழுமையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், திறமையாகவும் சரி விகிதாச்சாரப்படி பங்கீடு செய்வதன் மூலம், தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியைப் பெருக்குதல்.
- நீர்ப்பாசன அமைப்பு முறையில் விவசாயிகளை ஈடுபடச் செய்வதன் மூலம், அவர்களிடையே, அதற்கான உரிமையுணர்வை ஏற்படுத்துதல்.
- நீரினைப் பயன்படுத்துபவர்களிடையே, அதனை சரி விகிதாச்சாரப்படி பகிர்ந்தளித்தல்.
- நீர்ப்பாசன அமைப்பு முறைகளை, தேவைக்கேற்ப செவ்வனே தொடர்ந்து பராமரித்தல்.
- பாசன அமைப்பின் கட்டுமானங்களைச் சிறந்த முறையில் பேண, அறிவியல் சார்ந்த மேம்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்துதல்.

### (iii) விவசாயிகள் அமைப்புகள்

விவசாயிகள் அமைப்புகள் கீழ்க்கண்ட மூன்று அடுக்குகளில் அமைக்கப்படும்.

- நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் (Water Users Association-WUA)
- பகிர்மானக் குழு (Distributory Committee-DC)
- திட்டக் குழு (Project Committee-PC)

### (iv) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தை வரையறுத்தல்

- மாவட்ட ஆட்சியர், மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பாசன அமைப்பின் பாசனப் பரப்பிடத்தையும், நீரியல் எல்லை (Hydraulic Boundary) யின் அடிப்படையில், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களாக, வரையறை செய்வார். இந்த வரையறை, அறிவிக்கையாக, அரசிதழில் வெளியிடப்படும். இவ்வாறு அறிவிக்கையாக வெளியிடப்பட்ட வரையறையை, மாவட்ட ஆட்சியர் தாமாகவோ, மனுக்கள், முறையீடுகள் காரணமாகவோ மேலாய்வு செய்யலாம் அல்லது திருத்தலாம்.

- வரையறுக்கப்பட்ட நீரினைப்பயன்படுத்துவோர் சங்கங்களின் பிரிவு வாய்க்கால்கள், பகிர்பான வாய்க்கால்கள், கிராம எல்லைகளுடன் கூடிய, பாசனப் பரப்பு அல்லது பாசனத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஆயக்கட்டு இவைகளைக் காட்டும் வரைபடத்தை தயாரிக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பார்.

**V) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம்**

- நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தை வரையறுத்து, அதற்கான மேலாண்மைக் குழுவை அமைத்து, தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.
- நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றும், நான்கிற்கும் குறையாத ஆனால் பத்துக்கும் மேற்படாத, ஆட்சி மண்டலத் தொகுதிகளாக (Territorial Constituencies) பிரிக்கப்படும்.
- ஒவ்வொரு சங்கமும், அரசு வருவாய்த்துறை பதிவேடுகளில் பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்துவோராக பதியப்பட்டுள்ள அனைவரையும் (நிலத்தை உடைமையாகக் கொண்டுள்ள உரிமையாளர் அல்லது குத்தகைதாரர்கள்) உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.
- மேற்குறிப்பிட்டுள்ள உறுப்பினர்கள், அந்தந்த நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கான பொதுக்குழு உறுப்பினர்களாக இருப்பதுடன் அதில் 18வயது நிரம்பியவர்கள் வாக்களிக்கும் உரிமையும் உடையவராவர்.
- ஒவ்வொரு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கும், ஒரு மேலாண்மைக் குழு இருக்கும்
- **தலைவர்**

  மேலாண்மைக் குழுவின் தலைவரை, மேற்கூறியவாறு வாக்குரிமை பெற்ற பொதுக்குழு உறுப்பினர்களால் நேரடித் தேர்தல் மூலம், மறைமுக வாக்கெடுப்பு முறையில், தேர்ந்தெடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.
- **மேலாண்மைக் குழு உறுப்பினர்கள்**

  ஒவ்வொரு ஆட்சி மண்டலத் தொகுதியிலிருந்தும், மேலாண்மைக் குழு உறுப்பினரைத் தேர்தல் மூலம், மறைமுக வாக்கெடுப்பு முறையில் தேர்ந்தெடுக்க மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.
- **சங்க உறுப்பினர்களாக சேருதல்**

  நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தை வரையறுக்கும் போதே, ஒட்டுரிமை பெற்ற நிலவுடமையாளர்களின் பெயர்

பட்டியல் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், நிலஉடமையாளர்களின் பார்வைக்காக வைக்கப்படும். விவசாயிகளின் பெயர்கள் விடுபட்டிருந்தாலும், பட்டாவில் மாறுதல் ஏற்பட்டிருந்தாலும், கிராம நிருவாக அதிகாரிகள் மூலமாக மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பித்து, தக்க மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

- ஓட்டுரிமை

  நீரினைப் பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர் ஒவ்வொருவரும், மேலாண்மைக் குழுவின் தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒரு ஓட்டும், அந்தந்த ஆட்சி மண்டலத்தொகுதியின் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க ஒரு ஓட்டும் போட வேண்டும்.

- மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

(vi) விவசாயிகள் அமைப்பில் துணைக் குழுக்களை (Sub-committees) உருவாக்குதல்

நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் மேலாண்மைக்குழு, சங்க அலுவல்களை கவனிப்பதற்காக, அதன் உறுப்பினர்களைக் கொண்டு, தேவையான துணைக்குழுக்களை அமைத்துச் செயல்படும். அதன்படி, கீழ்க்கண்ட, நான்கு துணைக்குழுக்கள் உருவாக்கப்படும்.

- நிதி மற்றும் நிதி ஆதாரங்கள் துணைக்குழு
- பணிகள் துணைக் குழு
- நீர் நிர்வாகத் துணைக் குழு
- கண்காணிப்பு மதிப்பீட்டாய்வு மற்றும் பயிற்சித் துணைக்குழு.

5. நீரினைப் பயன்படுத்துவோர்கள் சங்கங்களின் பணிகள்

- பாசன வாய்க்கால்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்
- நீர்வள ஆதாரத் துறையிடமிருந்து பகிர்மான வாய்க்கால் தலைப்பில் வழங்கப்படும் நீரினைப் பாசனதாரர் அனைவருக்கும் சமவிகிதமாக உரிய நேரத்தில் பங்கிட்டு அளித்தல்.
- சிக்கனமாக நீரை பயன்படுத்தத் தேவையான பணிகளை செயல்படுத்துதல்.

- பாசனப்பரப்பில் நீர் பங்கீட்டுப் பணிகளில், விவசாயிகளிடையே ஏற்படக் கூடிய பூசல்களைத் தீர்த்து வைத்தல்.
- நிதி ஆதாரங்களைப் பெருக்குதல்.
- தண்ணீர் தீர்வையை விவசாயிகளிடமிருந்து வசூலிக்க, வருவாய்துறை அலுவலர்களுக்கு உதவி செய்தல்
- சங்க வரவு செலவு கணக்குகளை பராமரித்து தணிக்கைகள் செய்தல்.
- கால்வாய் மற்றும் ஏரிப்புறம்போக்கு நிலங்களில் மரங்கள் வளர்ப்பதை ஊக்குவித்து அவற்றை பேணிக்காத்தல்
- சங்கத்தின் அதிகார எல்லையிலுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள வாய்க்கால், வடிகால், குளம் மற்றும் புறம்போக்குகளில் அத்து மீறிய ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
- பாசன அமைப்புகளுக்கும், கட்டுமானங்களுக்கும், சேதாரம் விளைவிப்பவர்களிடமிருந்து பொதுக்குழுவின் மூலம் இழப்பீடு வசூலித்தல்.
- அவ்வாறு சேதப்படுத்திய நபர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்தல்.

6. தகுதி வாய்ந்த அதிகாரியும் (Competent Authority) அவரது பணிகளும்

- அரசு அறிவிக்கையின் மூலமாக நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் பணிகளைச் செயலாக்கத் தேவையான உதவிகளைச் செய்யும் பொருட்டு நீர்வள ஆதார துறையின் சம்பந்தப்பட்ட உதவிப்பொறியாளர்/ இளநிலைப்பொறியாளர்/ மேற்பார்வையாளரை தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தினால் எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப் படுத்துவதிலும், நிறைவேற்றுவதிலும் அந்த தகுதி வாய்ந்த அதிகாரிகள் நீரினைப் பயன்படுத்துவோர் சங்க பொறுப்பாளர் களாக இருப்பார்கள்.

நீர்வள ஆதாரத்துறை
மதுரை மண்டலம்.

நேஷனல் ஆப்செட் ☎ 331013

Government of Tamilnadu
Water Resources Department

From
Thiru. Vibhu Nayar, I.A.S.,
Project Director,
IAMWARM Project, MDPU Office,
Chepauk, Chennai – 600 005
Email: mdputn@gmail.com
Phone:044-28588440
Fax: 044-28588441

To
The District Collectors,
TN-IAMWARM Project.
(Phase-I,II and III Sub Basins)
as per list

Letter No. MDPU / F30/2009 dated 25.02.2009

Sir,

Sub: TN IAMWARM Project - Implementation - Awareness creation - Utilisation of Gram Sabha meetings – regarding.

Ref: 1. This Office Lr MDPU / F30 / 2008 dated 08.08.2008
2. This Office Lr MDPU / F30 / 2008 dated 05.01.2009
3. This Office Lr MDPU / F30 / 2008 dated 22.01.2009

*********

I invite kind reference to this office letters cited, where in it was requested to utilise the Gram Sabha meetings scheduled to be held on 26.01.2009 as part of awareness creation in the IAMWARM Project Villages by organising the meeting involving all the line department.

In this connection it is informed that in Thoothukudi District TN IAMWARM Project awareness programmes were conducted along with the Grama Sabha meetings with the participation of District Collector. The meetings are well organised in the Thoothukudi District and a good example to be followed in all districts.

A few photographs taken on the occasion and copies of the pamphlets distributed to the participant farmers of the project area are also put on the TN IAMWARM web site **www.iamwarm.gov.in (Gram Sabha meeting in Home page)** to view the photos and phamplets.

26/2/09

for Project Director

26/2/09